முடிவு எடுத்து இருக்கிறது. ஆனால் அதை எல்லாம் ஒரே ஆண்டில் செய்து விட முடியாது. படிப்படியாகத்தான் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இருந்தாலும் அதைப் பற்றி தனியாக ஆய்வு செய்து தேவையான படுக்கைகள் அங்கே கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 520. திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு போக்குவரத்துத்துறை, அமைச்சர்.

520—

லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்த நடவடிக்கை

* 3250—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாநகரத்தில் பகல் நேரங்களில் லாரி போக்குவரத்து அதிகமாக உள்ளதால், பள்ளி செல்லும் மாணவர்கள், அரசு ஊழியர்கள், நிறுவனங்களில் பணிபுரிவோர், மருத்துவமனை செல்வோர் குறித்த நேரத்தில் தங்கள் பணி யிடங்களுக்குச் செல்ல இயலாமல் போவதோடு, அதிக அளவில் விபத்துக்கள் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க லாரிகளை மதுரை மாநகருக்கு வெளியே நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரில், பகல் நேரங்களில் லாரிகள் போக்குவரத்து அதிகமாக இருக்கின்றன. மதுரை நகரம் மிகப் பழமையான நகரமாக இருக்கின்ற காரணத்தால் சாலைகள் மிகவும் குறுகியதாக இருக்கின்றன. அந்தப் பகுதி களிலே குறிப்பாகப் பள்ளி, செல்லும் மாணவர்கள், அரசு அலுவலகங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், விபத் துக்கள் அதிகமாக ஏற்படுகின்றன. அதைத் தடுக்கும் வண்ணம் சென்னையிலுள்ளது போல் தாம்பரத்தைத் தாண்டி நகருக்கு

TRUTH ALONE TRIUMPHS

உள்ளே லாரிகள் வராத வண்ணம் இருப்பது போல், மதுரையில் மதுரையைச் சுற்றியுள்ள 8 அல்லது 10 கிலோ மீட்டர் வெளியில் தான் பகல் நேரங்களில் லாரிகளை நிறுத்த வேண்டும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரத்தைப் போல மாநகர்கள் இருக்கின்ற அந்த இடங்களிலே நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைப் போல மதுரை மாநகரத்திற்குக் குறைந்தது 600க்கு மேற்பட்ட லாரிகள் நாள்தோறும் வந்து அடைகின்றன. பொருள்களை ஏற்றி வருகின்றன. அவைகளை இறக்குவதற்கு அவர்களுக்குத் தேவையான இடவசதியைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு 4 இடங்களில் லாரிகள் அங்கு காலையில் வந்து நிறுத்துவதற்காக அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்வதற்காக இந்த அரசு துரித நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9.45

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4 இடங்கள் என்று குறிப்பிட்டார்கள். எந்த இடங்கள் என்றும் விளக்கவில்லை. அதைப்போன்று, லாரிகள் வரக்கூடாத நேரத்தை, காலை 8 மணியிலிருந்து 11 மணி வரையில் என்று குறிப்பிட்ட நேரம் வைத்து, அந்த நேரத்திலே லாரிகள் நகருக்குள் வந்தால் அதைப் போக்குவரத்து போலீஸ் அதிகாரிகள் கண்காணித்து உடனடியாக ஸ்தலத்திலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய விதிகள் இருந்தாலும்கூட, சில நேரங்களிலே தவிர்க்க முடியாமல் சில லாரிகள் உள்ளே வந்து விடுகின்றன. இதை இந்த அரசு கவனத்திலே கொண்டு, விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 4 இடங்களைத் தேர்வு செய்து, அந்த 4 இடங்களில் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது முதல் கட்டமாக, ஆரப்பாளையம் என்ற இடத்தில் அந்தப் பணிகள் முடிவடைந்து.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர், ''ஆரப்பாளையம்''.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : ஆரப்பாளையம் என்ற இடத்தில் அந்தப் பணிகள் நடைபெற்று முடிவடைந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ.மு. சுப்பிரமணியம்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது தெற்கிலேயிருந்தும், மேற்கிலேயிருந்தும் வருகின்ற வாகனங்களுக்கு ஆரப்பாளையம் சரியாக இருக்கும்,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பிரமணியம், மாண்புமிகு அமைச்சர் 4 இடங்கள் என்று சொல்லியிருக்கிறார், நான்கு இடங்களில் ஒரு இடம் ஆரப்பாளையம். ஆகவே. அந்த ஒரு இடம் மட்டும் என்று அல்ல.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து, திருச்சியிலிருந்து வரக் கூடிய வாகனங்கள், லாரிகள் ஏரிப்பாளையம் வழியாக, போக்குவரத்து பிரச்சினை காரணமாக காலையிலே செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. மாற்று வழியாக குருவிக்காரன்சாலை வழியாக ஒரு சிறிய குறுகிய பாலத்தின் வழியாக இந்த லாரிகள் எல்லாம் அனுமதிக்கப்படுவதால், காலையிலே குழந்தைகள் பள்ளிகளுக்குச் செல்கின்ற நேரத்திலே பல விபத்துக்களுக்கு பள்ளிக் குழந்தைகள் உள்ளாகிறார்கள் என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சொன்ன யோசனையைப்போல காலையிலே 2, 3 மணி நேரம், அதாவது 8 மணியிலிருந்து 11 மணிவரையிலும் லாரி போக்குவரத்தை நிறுத்தி வ்வக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலை 9 மணியிலிருந்து பிற்பகல் 1.00 மணி வரையிலும், மாலை 4 மணியிலிருந்து இரவு 9 மணி வரையிலும் லாரிகள் அந்த நகரங்களுக்குள்ளே வரக்கூடாது என்று விதிகள் இருக்கின்றன. விதிகளை மீறி சில லாரிகள் வருகின்ற நேரத்தில், அதற்குக் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிகளைத் தவிர, வளர்ந்து வருகின்ற எல்லா நகரங்களிலுமே இந்தப் பிரச்சினை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட திட்டம் எல்லா நகராட்சிகளுக்கும் விரிவு படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நகராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துகின்ற நேரத்தில், அந்தந்த நகரங்களிலேயிருந்து பொருள்களை ஏற்றிச் செல்லவோ அல்லது இறக்கிச் செல்லவோ வணிகர்களுக்குப் பல்வேறு இடையூறுகள் ஏற்படும். ஆகவே, மாநகராட்சிகளாக இருக்கின்ற மூன்று இடங்களில் மட்டுந்தான் இந்த விதிகளை இந்த அரசு விதித்து இருக்கிறது. ஆகவே படிப்படியாக எந்தெந்த இடங்களிலே இது போன்று நெரிசல் ஏற்படுகிறதோ அந்த இடங்களில் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசு கவனத்திலே கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 521. திரு. எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

521—

விபத்துக்களைத் தடுக்க மோட்டார் வாகன விதிகளை கடுமையாக்குதல்

*4917—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ் நாட்டில் சாலை விதிகளை முறையாகக் கடைப்பிடிக்காததால் ஏராளமான சாலை விபத்துக்கள் நடப்பதைத் தடுக்க மோட்டார் வாகன விதிகளைக் கடுமையாக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நடைமுறையில் உள்ள போக்குவரத்து விதிகளை தீவிரமாக அமுல் செய்து, சாலை விபத்துக்களை குறைக்க, காவல் துறை முயற்சி செய்து வருகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமல் போக்குவரத்தெல்லாம் மிகவும் அதிகரித்து